ஏப்ரல் 2012
APRIL 2012
5 - 12
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

மாத இதழ்
The Spring

கவித்தூறல்கள்



திரும்பி வந்துவிடு.., என் துணைவா...!



குஜராத் கொடுமை 10-ஆம் ஆண்டு..!

## வெண்மணி விகாரம் முதல்.., குஜராத் கொடுமைகள் வரை..!


சுதந்தர பாரதம் இதுவரை கண்ட கலவரங்கள்..!

## தீர்வு என்ன..?

இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

துணையின் புரிதல்..,



வளர்க்கும் காதல்..!

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# புத்தன் போதித்தது புண்ணியத்தை..!
# இவர்கள் இடிப்பதோ ஏகஇறைஇல்லத்தை..!



தங்களின் வீடுகளை விட்டு அவர்கள் நியாயமின்றி வெளியேற்றப்பட்டார்கள். 'அல்லாஹ்தான் எங்கள் இறைவன்' என்று அவர்கள் கூறியதுதான் அவர்கள் செய்த குற்றம். அல்லாஹ் மக்களில் சிலரைக்கொண்டு சிலரைத் தடுத்துக் கொண்டிராவிடில் மடங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், யூத ஆலயங்கள், அல்லாஹ்வின் பெயர் அதிக அளவில் கூறப்படும் மஸ்ஜித்கள் ஆகியவை தகர்க்கப்பட்டிருக்கும்! திண்ணமாகத் தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய்வான். நிச்சயம் அல்லாஹ் வலிமை வாய்ந்தவனும் யாவற்றையும் மிகைத்தவனுமாவான்.

திருக் குர்ஆன் 22 : 40

# வசந்தம்

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
March *2012 மார்ச் 2012*
*மலர் 5 இதழ் 11*



**Chief Patron**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
*முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி*

**General Supervisor**
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
*காலித் அல்-ஸபா*

**Editor**
*ஆசிரியர்*
M.A.Abdul Musavir
*மு.அ. அப்துல் முஸவ்விர்*

**Editorial Board**
குழுமம்
IPC Tamil Section
*இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு*

**Initial Lay-out**
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
*அபூ மதீஹா*

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Belal
*நாதிர் பிலால்*

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency
www.zukhruf.net

**PUBLISHER**
வெளியீடு

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية



**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97848068
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

**WEBSITE** வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com

**SOCIAL WEBSITES**
சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook
twitter
www.twitter/vasantham2k
YouTube
Scribd





அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்




12 **வாழ்க்கை**
A.H. ஃபாத்திமா ஜனூஃபா
*இல்லறத்தை போற்றும் துணை இழக்கப்பட்டால், பாரம்பர்யத்தின் பெயரால் தடை காணாது அதனை மீண்டும் பெற மறுமணம் ஊக்குவிக்கப்பட வேண்டும்..!*

2 **வாசகர் சுகந்தங்கள்**
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

3 **தலையங்கம்**
ஆசிரியரிடமிருந்து..!

8 **பண்பாடு**
இளவேனில்

10 **IPC வழித்தடங்கள்**
அப்துல்லாஹ்

13 **ஒழுக்கம்**
ஜோதிர்லதா கிரிஜா

15 **கவித்தூறல்கள்**
தமிழக சகோதரி

16 **மழலையர் சோலை**
சவுந்தர்யம்

18 **வனிதையர் பக்கம்**
அபூமதீஹா

19 **சுற்றத்து செய்திகள்**
அழகிய சிறியவன்

20 **சிறப்பு அறிவுப் போட்டி!**





4 **முகப்புக் கட்டுரை**
மு.அ.அப்துல் முஸவ்விர்
**ஓங்க வேண்டும் வனிதையரின் மேன்மை..!**
**ஒழிய வேண்டும் அவர்மீதான வன்மை..!!**
*மகளிர் மீதான வன்கொடுமைச்சரம்..! இதனைத் தீர்க்க அழகிய மார்க்கம் பதிக்கின்றது உன்னத*

17 **விருந்தினர் பக்கம்**
ஜெ.ஜெயலலிதா





بريد الربيع - كلمة العدد - اين تذهبون - -أنشطة اللجنة-استبيان -يتيم
غريب (نشيدة) –الغضب -الضغوط النفسية سر العمل-صفحة الأطفال
-العبقرية الصغيرة - الموسيقى-علميان -أخبار العالم -ماذا كان في 2011

# மார்க்க வழியில் தேசப்பற்று போற்றும் வசந்தம்.!



வசந்தம் ஃபிப்ரவரி 2012 இதழ் கண்டேன்!தேசிய நலனில் முஸ்லிம்களின் பங்கு குறித்த அகார் அவர்களின் உரையை சில காலம் முன்னர் கேட்டிருந்தாலும் எழுத்து வடிவில் வசந்த வரிகளாய் வாசித்தபோது, மாநாட்டு நிகழ்வுகள் என் கண் முன் விரிந்தது. எமது நம்பிக்கை ஆழத்தை இன்னும் அழகாய் வலுப்படுத்தும் வசந்தம், மார்க்க வழியில் தேசநலனை படம் காட்டியது போற்றுதலுக்குரியது.

முஹம்மத் ரம்ஸி
கலுதர – இலங்கை
ஃபர்வானியா – குவைத்


வசந்தம் ஜனவரி 2012 இதழ் கண்டேன். உணர்வுகளை மதிக்கச் சொல்லும் ஆசிரியர் தலையங்கம் அழகிய சிந்தனை!அயல்தேசத்து அநாதைகள் கவிதை அழகிய ஆக்கம். அர.ஃபாவின் சாதனைகள் அரிதான தகவல்.

அஸ்மா
தஞ்சை – தமிழகம்
ருமைதியா – குவைத்

வசந்தம் ஜனவரி 2012 இதழ் கண்டேன். முகப்புக் கட்டுரை தந்த தொலைக்காட்சித் தொடர்கள் பற்றிய தகவல், இன்றைய காலச் சூழலுக்கு மிகவும் பொருத்தமானது. மனிதனின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய வழகயில்,சமூகத்துக்கு உகந்த வகையில் நிகழ்ச்சிகளை வழங்கும் ஊடகங்களுக்கு மத்தியில் ஆபாசம்,வன்மம் என்று சீரழிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் பெருமளவில் வருகின்றன.நல்லதை மட்டும் வாழ்க்கைக்கு எடுத்துக்கொண்டு, அல்லதை.. கெட்டதை தூக்கி எறிந்து ஊடகங்களை முற்றிலும் நல்லவையாக மாற்ற துணைபோவோம்.



## மின்னஞ்சலில்..!



வரவர வசந்தம் மெருகு கூடுகின்றது. செய்திகள்,கட்டுரைகள் பயனுள்ளவையாக இருக்கின்றன.சமூகவலைதளத்தல் வந்ததிலிருந்து பலருக்கும் எளிதாய் போய் சேருகின்றது.குறிப்பாக ஃபிப்ரவரி இதழை படம் மற்றும் ருடைைஉழனந வடிவில் ஒரே நேரத்தில் தந்தமை சமூகவலைதள அமைப்பில் ஒரு நல்ல முன்னுதாரணம்.கண்ணீர் வரவழைத்துவிட்டது கவித்துறல்கள்!இதன் மூலம் படத்தை அருகில் வைத்துக்கொண்டே தொடர்புடைய ஆக்கங்களை வாசித்துக்கொள்ள முடிகின்றது.இருபது பக்கங்களில் இத்தனை செய்திகள்..! மாஷா அல்லாஹ்..!

அஹ்மத் நிஸார்-இராமகிருஷ்ணன்-ஹபீபுல்லாஹ்-ரஹ்மத்துல்லாஹ்-அல்தா.ஃப்-அப்துர் ரஹ்மான்
(அயல்தேசத்து அநாதைகளான ஒரே அறை தோழர்கள்)
துபை

பாகிஸ்தான் இளந்தளிருக்கு இளவேனில் செலுத்திய அஞ்சலி கட்டுரை அர.ஃபாவின் சாதனைகளை



மனம் நெகிழச் செய்த அதே வேளை மரணம் பற்றிய இறையச்சத்தையும் எம்மில் தோற்றுவித்தது.

J. அப்துல் ஜலீல்
கடியாச்சேரி-தமிழகம்
மங்க.ஃப்-குவைத்

அயல்தேசத்து... கவிதையின் வரிகள் எம் மனத்தைக் கணக்கச் செய்தது என்றால், தலையங்க 'உணர்வு..... வரிகள் எம்மை நெகிழச் செய்துவிட்டது.

T. நியாஸ் அஹமத்
அபிவிருத்தீஸ்வரம் – தமிழகம்
மங்க.ஃப் – குவைத்

## .ஃபேஸ்புக்கில்..!

facebook



@ Mohamed Ali Kollapuram
வசந்தம்..! நீ என்னருகில் என் சோகம் வெகு தொலைவில்.!



@Riyaz Habeeb Rahman அழகு!

விருப்பம்

@Mohamad Rouf
@Mohamed Rahmathullah
இன்னும் பலர்..!

## ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!

sameh shaker @ideas4islam
Kalai @Kalai_
Tamil Now @tamilnow
A.R.Rahman @arrahman
maruthupandian @mmpandian
இன்னும் பலர்..!

# காத்திருக்கும் சோதனைகள்..!
# மீளச் செய்யும் இறைநியதிகள்..!!

மனித வாழ்வே எதிர்பாராத திருப்பங்களின் தொடர்கதைகள்..!அதில் காத்திருத்தல் என்பது திருப்பங்கள் தரும் நிகழ்வுகளின் அத்தியாயங்கள்..!அந்த அத்தியாயங்களின் ஒவ்வொரு வரிகளும் நம்மை சோதிக்கும் பாடங்கள்..!

பெற்ற அன்னையின் உடல்நிலை மிகவும் அபாய நிலையில் இருக்கும் செய்தி, என்னை திடீரென்று தாய்நாட்டு விஜயத்துக்கு ஆளாக்கியது. சென்னையில் பனிமூட்டம், அங்கு விமான நிலையத்தையே மூடவைத்துவிட்டது. ஆதலால், வானத்தில் வட்டமிட்டுக் கொண்டும், அண்டை நாட்டு விமானநிலையத்தில் எரிபொருள் நிரப்பியும் காலத்தை கரைக்கச் செய்து கொண்டிருந்தார் விமானி. !அனைத்தும் இறைநாட்டமே எனும் தவக்குல் ஒருபுறம்.., என்னைப் பெற்றவளை அவர்தம் இறுதிமூச்சு முடியும் முன்னர் காணுவேனா என்பது போன்ற மனத்தை குலைக்கும் மனிதஇயல்பு எண்ணங்கள் மறுபுறம் மாறி மாறி தாக்க.. இறுதியில்., தாயைக் காணும் நிர்ணயிக்கப்பட்ட பயண நேரத்தைவிட, ஏறத்தாழ பதிநான்கு மணிநேரம் தாமதித்து தாய்நாட்டை அடைந்தேன்.

விமானநிலையத்திலிருந்து நேரே மருத்துவமனைக்கு சென்று தாயைக் கண்டு கண்குளிர்ந்து நிம்மதி அடைந்தேன். அனைத்து இரத்தங்களும் உடனிருக்க நான் ஒருவன் மட்டும் இல்லாத குறை நீங்கக் கண்டவுடன் பெற்றவரின் கண்களில்தான் எத்துணை ஆனந்தம்..!இறைவன் வெறுமனவா சொன்னான் தாயின் பாதங்களில் சுவனம் இருக்கின்றதென்று!புகழனைத்தும் இறைவனுக்கே..! (அதன் பின்னர் ஒன்பது நாட்கள் கழிந்து என்னைப் பெற்றவர் காலமானார். (இன்னா...)

உடல்நிலை சரியில்லாத என் தாயைக் காணும் வரை.., இறுதிநேர பயணச்சீட்டு வாங்குதல், இக்கட்டான நேரத்தில் விமான தாமதம் என்று பல அம்சங்கள் நிகழ்ந்த அந்த காத்திருப்பில்.., அவரக் காண நானும், என்னைக் காணும் அவாவில் என் தாயின் உடல் அசதி மீறிய புத்துணர்வும் அடைந்த காத்திருப்புக்கள் எனக்கு உணர்த்திய பல செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள நாட்டம்!

காத்திருப்பு என்பது எத்துணை பெரிய பொறுமைச் சாட்டியம் என்பது அப்போது எனக்குப் புரிந்தது. அதுவும் குறிப்பிட்ட ஒரு நிகழ்வு எமது வருகையை கட்டாயமாக்கி நிறுத்தும்போது.., அல்லது நிகழ்வுகளோ அல்லது தேவையானவரோ எமது இருப்பை நோக்கியதாக இருக்கும்பட்சத்தில் அதுபுறம் நிற்கும் தவிப்பு.., காத்திருத்தல் தரும் பல்வேறுவிதமான நல்ல, கெட்ட சிந்தனைகள், என்ன நடக்குமோ எனும் படபடப்பு.., இவைகளெல்லாம் நிகழ்வுகளாக அல்ல.., மாறாக பாடங்களாக.., இறைநியதியின் எழுதப்பட்ட ஆவணங்களாக மட்டுமே இருக்க முடியும். தேவையின் கட்டாயத்தை நாம் உணர்ந்து.., அதனை எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தோமேயானால், நிச்சயம் நினைத்ததை சாதித்திருக்க முடியும்..! குறைந்தபட்சம் அவசியப்படும் நேரத்திலாவது இதனை செய்ய முடியும்..!ஆனால் எம்மால் இயலுவதில்லையே..!இதுதான் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நடப்பது..!

இந்த கட்டங்கள் ஒவ்வொரு மனிதனையும் சோதிக்கக்கூடியவை..! அந்த சோதனைகளிலிருந்து மீள வழி காட்டுபவைதான் இறைநியதிகள்..! காத்திருத்தல் என்பது மட்டுமல்ல, அனைத்தும் இறைநாட்டம் எனும் திண்ணமான எண்ணம் எம்மில் பொதிந்துவிட்டால்தான் எது நடப்பினும் எம்மால்

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!

சாமான்யர்களின் அச்சக்குரல்கள் அகற்றப்பட்டிருக்கின்றதா..?
ஒடுக்கப்பட்டோரும்,சிறுபான்மையினரும் மட்டுமே பாதிப்புக்குள்ளாவதேன்..?
கலவரங்களை களையெடுக்க முடியாதா..?
சுதந்தர பாரதம் இதுவரை கண்ட கலவரங்கள்..!

# கீழ்வெண்மணி கோரம் முதல்.., குஜராத் கொடுமைகள் வரை..!



பத்தாண்டுகளுக்கு முன்னர் அனைத்து இந்திய பத்திரிகைகளிலும் வெளியான அந்த பரிதாபப் படத்தை யாரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்கமாட்டார்கள்!

உயிர்ப்பிச்சைக்காக ஏங்கும் அந்த நடுத்தர வயது மனிதர், ஒரு கெஞ்சல் தொணியில் நிற்கும் அந்த உண்மை சம்பவம் கல் நெஞ்சையும் கரைக்கச் செய்துவிட்டது.

உச்சி சூரிய வெளிச்சத்தையும் இருட்டாக மாற்றிய புழுதி படலத்திற்கும், கொலைவெறி கூச்சல்களுக்கும் இடையே உலக சமூகத்தின் உள்ளங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்திய அந்த புகைப்படம் பிரபல புகைப்படக் கலைஞர் ஆர்கோ தத்தாவின் கருவிக்கண்களில் பதிவானது.

உயிர் பிச்சை கேட்கும் நிர்க்கதியான அந்த மனிதரின் கண்களில் தென்பட்ட அச்சம், ஒரு சமூகத்தின் பரிதாப நிலையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்தது.

ஆர்கோ தத்தாவின் கருவி பதிவு செய்த குத்புதீன் அன்சாரி என்ற 28 வயதான இளைஞனின் புகைப்படம் 2002 குஜராத் இனப் படுகொலையின் கொடூரத்தை உலகிற்கு எடுத்தியம்பியது.இரத்தக்கறை படிந்த அழுக்கான சட்டையை அணிந்துகொண்டு, உயிர் பிச்சை கேட்டு கை கூப்பி, கண்ணீர் நிரம்பிய கண்களில் தென்பட்ட அதீத அச்சத்துடன் கூடிய குத்புதீன் அன்சாரியின் புகைப்படம் ஆர்கோ தத்தாவுக்கு உலக ப்ரஸ் ஃ போட்டோ விருதை பெற்று தந்தது.

அன்று இராணுவத்தின் வேனில் புழுதிப் படலத்தின் ஊடே கடந்து செல்லும் வேளையில் ஆர்கோவும், அவரது நண்பர்களும் மின்னல் அடித்ததை போல அன்ஸாரியை கண்டார்கள். நிர்க்கதியாக உயிருக்காக போராடும் ஒரு கூட்டத்திற்கு உதவாமல் செல்லக்கூடாது என்று பத்திரிகையாளர்கள் வற்புறுத்தியதற்கு இணங்க அன்சாரிக்கு புதிய வாழ்க்கைக்கான வழி கிடைத்தது.



அந்த கொடூர நினைவுகளை அன்சாரியின் வார்த்தைகளிலேயே கேளுங்கள்:-“பற்றி எரிகின்ற தீ ஜுவாலைகளில் எல்லாம் முடிந்துவிட்டது என்று கருதிய வேளையில்தான் இராணுவ வீரர்களின் வேன் அவ்வழியே வந்தது. வன்முறையாளர்களின் கும்பல் ஒன்று தீவைத்து கொளுத்திய கட்டடத்தின் முதல் மாடியில் ஒரு சிறிய குழுவினர் சிக்கிவிட்டனர். எதையும் கண்டுகொள்ளாமல் அப்பகுதியை கடந்து சென்ற வேன் சிறிது நேரம் கழித்து திரும்பி வந்தது. மாடியில் சிக்கிய குழுவினரும் உயிர் தப்பினர்.

உயிருக்காக யாசிக்கும் கதியற்ற மனிதரின் புகைப்படம் உலக முழுவதும் அனைத்து பத்திரிகைகளிலும் வெளியானது. குஜராத் கூட்டுப் படுகொலைகளில் பாதிக்கப்பட்டவர்களின் முகமாக குத்புதீன் அன்சாரியின் புகைப்படத்தை ஊடகங்கள் குறிப்பிட்டன. ஆனால், இவையெல்லாம் அன்சாரிக்கு தெரியாது. இந்த புகைப்படம் மூலம் தான் அதிகமாக பாதிக்கப்பட்டதாக அன்சாரி கூறினார்.

தனது வேலையை இழந்து சொந்த ஊரையும், மாநிலத்தையும் விட்டு வெளியேறி தனது சகோதரிகளுடன் மகராஷ்ட்ராவில் குடியேறியதற்கு இந்த புகைப்படம்தான் காரணம் என்று அன்சாரி கூறுகிறார். ஊடகங்களின் வேட்டையாடல் காரணமாக அன்சாரிக்கு கிடைத்த சிறு வேலைகளையும் இழக்க வேண்டியது ஏற்பட்டது. அரசியல்வாதிகள் முஸ்லிம் வாக்கு வங்கிக்காக அன்சாரியின் புகைப்படத்தை பயன்படுத்தினர். ஆனால், ஒரு டீ ஷர்ட் விலை குறைவாக கிடைத்ததும், உம்மாவுக்கு ஹஜ்ஜிற்கான ஊசி போடுவது விரைவில் நடந்ததும், இந்த புகைப்படம் அளித்த நினைவுகளில் சிலதாகும்.

ஆம்! குஜராத் கலவரம் ஒரு வரலாற்றுப் பதிவின் மறக்க முடியாத அங்கமாகிவிட்டது. பாரதம் மிகச் சமீபத்தில் கண்ட இந்த கலவரங்கள்போல் பல்வேறு கலவரங்கள் நம் நாட்டில் நடந்திருக்கின்றன.ஆனால்,சில குறிப்பிட்ட கலவரங்கள் என்றும் மாறாத வடுக்களை ஏற்படுத்தி சென்றன.

1990-ல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு நடந்த வன்முறையில் பல உயிர்கள் பறிபோயின. இதுவும் முன்பு நடந்த சம்பவங்களைப் போலவே நடந்தது. 2002-ல் நூற்றுக்கணக்கானோர் குஜராத் வன்முறையில் பலியானார்கள். கந்தாமால் வன்முறையில் கிறிஸ்துவர்கள் கொல்லப்பட்டனர். கிராமங்கள் அழிக்கப்பட்டன.

இப்போதைக்கு ஒரே வித்தியாசம் தொலைக்காட்சிகள் நேரடியாக அவற்றை காட்சிகளாக காட்டுகின்றன. சமீபகால இன மோதல்களில் ஓரளவுக்கு நீதி வழங்கப்படுவதாகக் கூறலாம். இருந்தாலும் இன வன்முறை மசோதாவில் இருப்பதுபோல ஓட்டைகள் இல்லாத சட்டங்களைக் கொண்டு வந்து நீதி வழங்குதலை இந்திய அரசு நிறுவவேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுப்பது நாட்டின் ஸ்திரத் தன்மைக்கு உதவும். இதுதான் உண்மையிலேயே தேசப் பாதுகாப் பாகும் என்கின்றார் பிரபல எழுத்தாளர் சீமா!

# ஞாபகங்களில் தீ மூட்டும் துயரம்..!

# 1968

Kன்னாள் தமிழக முதல்வர் பிறந்த மாவட்டமான திருவாரூரி லிருந்து வெறும் அரை மணிநேர பயணத்தில் இருக்கின்றது, கீழ் வெண்மணி கிராமம்!



நகரத்தின் போலித்தனங்கள் இன்றி,உழைப்பை மட்டுமே விதைத்து, கூலியை அறுவடையாகப் பெறும் தலித் மக்கள் செய்த குற்றம் என்ன?ஒரு மூட்டை நெல் அறுப்பதற்குக் கூடுதலாக அரைப் படி நெல் கூலியாகக் கேட்டதுதான் அவர்கள் செய்த ‘மாபெரும் தவறு”!

அந்த 1968, டிசம்பர் 25 ஆம் தேதியை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது.கூலி உயர்வுக்காகப் போராடிய அப்பாவி, தலித் விவசாயத் தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குவதற்காக, சாதிவெறி, மிரட்டல் மிராசுதார்கள் கையாண்ட கொடுமைகளின் உச்சமாக அந்த சம்பவம் இருக்கிறது.

இன்றும், இங்குள்ள நினைவு ஸ்தூபியில் வயதுடன் பொறித்து



வைக்கப்பட்டுள்ள இறந்த 44 பேரின் பெயர்கள், 3,5 வயதுடைய குழந்தைகளும் அக்கொடுமைக்குத் தப்பவில்லை என்பதை பறைசாற்றுகின்றன. நெல்மணிகளுக்காகப் போராடியவர்களின் கண்மணிகள் அல்லவா இவர்கள்..!

கூடுதல் கூலி கேட்டதன் பின்னணியில்தான் டிசம்பர் 25 ஆம் தேதியன்று ஊரில் குடிசைகளுக்கு வரிசையாக தீவைத்தார்கள். எங்கே போவது என்று தெரியாத நிலையில் பயந்து கொண்டுபோய் ஒருவருடைய குடிசைக்குள் புகுந்துகொண்ட தலித் மக்களை உயிரோடு தீ வைத்து கொளுத்தினார்கள்.இந்தக் கொடூர கீழ்வெண்மணி சம்பவம் நாட்டையே உலுக்கியது.

கீழ்வெண்மணி சம்பவத்தை அடிப்படையாக வைத்து நாவல்களும் வெளிவந்தன.ஆனால்,இன்று நிலைமை மாறிவிட்டது.குற்றவாளிகளில் சிலர் விடுவிக்கப்பட்டனர்.சிலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட சமூகத்தினர்,கொன்ற சமூகக் குடும்பத்துடன் சம்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர். காலமாற்றத்தைக் காட்டும் ஆறுதல்களாக இவை இருந்தாலும்.., அன்று உயிருடன் தீமூட்டப்பட்ட இந்த சம்பவம் இன்றும் நம் நினைவுகளின் நிழல்களில் கனன்று கொண்டுதான் இருக்கின்றது.

லவரங்கள் இரு வெவ்வேறு வகுப்பினரி டையே என்றால், அதன் பாதிப்புக்கள் குறித்த தாக்கம் எத்துணை ஆழமானது என்பதற்கு, 43 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அகமதாபாத் வகுப்புக் கலவரங்கள் சாட்சியாக நிற்கின்றன.

தீவைப்புக்களின் வெந்தணலில், குளிர்ந்து கொண்டிருக்கும் அதன் நினைவுகள் இன்னும் அந்த கொடுமையை பறைசாற்றத்தான் செய்கின்றன.

சில குறிப்பிட்ட கலவரங்கள் என்றும் மாறாத வடுக்களை ஏற்படுத்தி சென்றன.

## நரகமான நகரம் 1969

அந்த ஆண்டு செப்டம்பர் 18 ஆம் தேதி அகமதாபத்தில் புகாரி சாஹேப் தர்காவில் உர்ஸ் விழாவை முஸ்லிம்கள் கொண்டாடிக் கொண்டிருக்கையில் அருகிலிருக்கும் ஜகந்நாதர் கோயிலுக்குச் சொந்தமான சில பசுக்களால் விழா பாதிக்கப்பட்டது. இந்த மாதிரியான விஷயங்களில் வழக்கமாக நடப்பதைப்போல, அடுத்தடுத்து நடந்த சில செயல்களால் மொத்த அகமதாபாத் நகரமும் மதக் கலவரத் தீயில் பற்றியெரியத் தொடங்கியது.குஜராத் நாளிதழ்கள் வதந்திகளைப் பரப்பி தங்கள் பங்குக்கு தீயில் பெட்ரோலை ஊற்றின.



பசுவின் கால் வெட்டப்பட்டு ஜகந்நாதர் கோயிலுக்கு வெளியே சிலர் போட்டதால் கலவரம் தொடங்கியதாக அவை எந்த ஆதாரமும் இல்லாமல் செய்திகளை வெளியிட்டன. ஆனால் உண்மை, இந்தப் பகுதிகளில் பசுக்களின் நடமாட்டம் அதிகம் என்பதும் அதனால் உர்ஸ் விழா எப்போதும் பாதிக்கப்படுவதில்லை என்பதே.ஆனால் அந்த ஆண்டு நடந்தது வேறு என்கின்றன செய்தி ஆதாரங்கள்!

1969 கலவரத்தின் இறுதியில் இராணுவம் வந்துதான் அமைதியை நிலைநாட்டியது. ஆனால் அந்த மூன்று நாட்களுக்குள் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். 6000 குடும்பங்கள் தங்கள் வீடுகளையும், உடைமை களையும் இழந்தனர். 660 பேர் கொல்லப்பட்டதாகவும், 1100 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் கலவரத்தைப் பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட ஜக்மோகன் ரெட்டி குழுவின் அறிக்கையின்படி கலவரத்தில் ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை, ஜன சங்கம் ஆகிய அமைப்புகளுக்குப் பங்குண்டு. “சம்பவத்தன்று போலீசார் கூட்டத்தைக் கலைத்தபோதிலும் நோட்டீசுகள் மற்றும் சுவரெழுத்துக்கள் மூலம் வதந்திகள் பரப்பப்பட்டு இந்துக்களிடையே அன்றிரவே கொந்தளிப்பு உருவாக்கப்பட்டது. இந்த வதந்திகள் மற்றும் செப்டம்பர் 19ஆம் தேதி வெளியான நாளிதழ்கள் பரப்பிய வதந்திகள் கலவரத்தை பெருமளவு அதிகரித்தன” என்று







அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
ஆம், மறுபடியும் நீதி கேள்விக்குறியானது!இந்தக் கலவரத்தில் பலர் குற்றம் சாட்டப்பட்டபோதிலும் ஒரேயொருவர் கூட தண்டிக்கப்படவில்லை. வழக்கமாக நடப்பதுதான்.

# நெல்லி நினைவுகள்!

## 1983

1983, பிப்ரவரி 18-இல் ஆறே மணி நேரத்தில் 2,191 பேர் கொல்லப்பட்டனர்.



1980-களின் தொடக்கத்தில் மாணவர்கள் தலைமைதாங்கிய போராட்டம் அசாமில் உச்சத்தில் இருந்தது. அனைத்து அசாம் மாணவர்கள் சங்கம் என்ற பெயரில் 1979 இல் தொடங்கிய இந்த இயக்கம், வங்க தேசத்தவர்களின் ஊடுருவலுக்கு எதிராக இருந்தது.

பிரதமர் இந்திரா காந்தி சட்டமன்றத் தேர்தலை நடத்தி மக்களின் தீர்ப்பைக் கேட்கலாம் என்று அறிவித்துவிட்டார். இதைத்தொடர்ந்து அனைத்து அசாம் மாணவர் சங்கம் தேர்தல்களைப் புறக்கணித்தது. கடும் பாதுகாப்புடன் நடைபெற்ற தேர்தலில் வாக்கு சதவிகிதம் வெறுமனே 13 சதவிகிதமே இருந்தது.பிரிக்கப்படாத நாகாவோன் மாவட்டத்தில் இருந்த நெல்லி கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி ஓட்டளித்தனர்.

தேர்தல் நடந்துமுடிந்து மூன்று நாட்கள் இருக்கும். அந்த பிப்ரவரி 18 ஆம் நாள் காலை 9 மணிக்கு ஒரு கும்பல் ஆயுதங்களுடன் ஊருக்குள் புகுந்தது. அந்தக் கிராமத்தில் இருந்த மக்கள் அனைவரையும் மதியம் 3 மணி வரை சின்னா பின்னமாக்கியது அக்கும்பல். பெண்கள் மற்றும் குழந்தைகளைக்கூட விடவில்லை.

நெல்லி கிராமம் சுடுகாடாக மாறி விட்டது. இந்தச் சம்பவத்திலிருந்து தப்பியவர்களுக்கு அரசு மிகவும் அற்பமான தொகையாக 5 ஆயிரம் ரூபாயை இழப்பீடாக வழங்கியது. 688 குற்ற வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 310 பேர் மீது குற்றம்தாக்கல் செய்யப்பட்டது. 378 வழக்குகள் போதிய சாட்சியில்லாமல் மூடப்பட்டன.

அனைத்து அசாம் மாணவர் சங்கத்தினருடன் மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதி அசாம் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது. அதில் 310 குற்றவழக்குகள் கைவிடப்பட்டன. இதன் விளைவாக அந்த இரக்கமற்ற கொலைகளைச் செய்தவர்கள் ஒருவரைக்கூட விசாரிக்க முடியாமல் போய்விட்டது. இது நல்ல முன்னுதாரணம் அல்ல என கொதித்தது நடுநிலை சமூகம்.

நெல்லி சம்பவத்தில் உயிர் நீத்தவர்களை தியாகிகளாக அறிவிக்கவேண்டும் என அசாமில் இப்போது கோரிக்கை எழுந்துள்ளது.











## சிக்கலான சீக்கியர் தாக்குதல்..!

## 1984



X ரு முன்னாள் பிரதமரின் படு கொலைக்கு காரண மானவர், குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்காக, அந்த சமூகத்தையே பழி வாங்கும் விதமாக தலைநகர் தில்லியில் வெடித்த கலவரம் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்திரா காந்தியின் படுகொலையை அடுத்து நடந்த சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் 2,733 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. படுகொலையிலிருந்து தப்பியவர்கள் வாழ்க்கை முற்றிலுமாக குலைந்துபோனது.

ஆண்டுகள் கழிந்துமஷ அவ்வப்போது அந்த இரணங்கள் பொங்குவதுண்டு!

தமது சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதமரானதும் மீண்டும் அதுகுறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியது, அந்த இரணத்தின் ஆழத்தை தெரிவிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை என்கிறார் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான குழுவின் தலைவர் ஆத்ம சிங் லுபானா.

> அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு

## யாரைத்தான் நம்புவதோ..?

## 1987



, தோ, மீண் டும் ஒரு முறை சிறுபான்மை முஸ்லிம்கள் தாக்கு தல்களின் பிடியில்..!

1987-இல் நடைபெற்ற சம்பவத்தை ஹசிம் புரா ஒருபோதும் மறக்காது. அங்கு ஆண்டுதோறும் ஷப் ஏ பாரத் என்னும் மத நிகழ்ச்சி நடைபெறும். காவல்துறையினர் அதிகமாக அப்பகுதியில் குவிக்கப்படுவார்கள். மதம் தொடர்பான உரை யாடலை அடுத்து பிரார்த்தனைகள் நடக்கும்.


ஏப்ரல் 14ம் தேதி 1987லும் இந்த நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது எதிர்த்தெருவில் ஒலிபெருக்கிகளை அலறவிட்டு பொது நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதுதொடர்பாக ஒருகட்டத்தில் இருபக்கமும் எதிர்ப்புகள் எழ, மது அருந்தியிருந்த போலீஸ்காரர் ஒருவர் கோபத்தில் துப்பாக்கியால் சுடத் தொடங்க,






கலவரம் உருவானது. இக்கலவரத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து கலவரத்தீ ஊர் முழுவதும் பரவி மூன்று மாதங்கள் தொடர்ந்தது. மீரட் கலவரம் குறித்த வழக்கை நடத்தும் விருந்தா குரோவர் அண்மையில் சண்டே இந்தியனுக்கு அளித்த பேட்டியில், “இந்த வழக்கு கடைசிக் கட்டத்தில் உள்ளது. இரண்டு சாட்சியங்கள் மட்டுமே விசாரிக்க வேண்டியுள்ளது. இரண்டு மாதங்களில் தீர்ப்பு வரும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம்” என்கிறார். 1987-ல் மீரட் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவே இல்லை என்கிறார் செய்தியாளர், சையத் குர்ரம் ரஸா!



# கலகம் காரணம் காவிரி..!

## 1991





’யற்கை தந்த ஆதாரம் தண்ணீர்! கலகங்களின் ஊற்றுக் கண்ணாகவும் ஆக்கப்படக்கூடிய அவலமும் ஏற்படத்தான் செய்தது.தமிழக-கர்நாடக மாநிலங்களுக்கிடையே காவிரி நீரைப் பகிர்ந்துகொள்வது குறித்து ஆராய, 1990-ல் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது காவிரி நதிநீர் ஆணையம்..!

இதன் முடிவின் எதிரொலியாக,1991, டிசம்பர் 13-இல் கர்நாடக மாநில அரசு பந்த்துக்கு அழைப்பு விடுத்தது. பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக விமர்சனங்களைச் சந்தித்து வந்த மாநில அரசு காவிரிப் பிரச்னையைப் பயன்படுத்தி மக்களை திசைதிருப்பியது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கன்னடக் கும்பலால் எண்ணற்ற தமிழர்கள் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் குடிசைவாசிகள். பெங்களூருவில் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில்தான் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல்கள்,கற்பழிப்பு, சொத்துக்கள் நாசம் என்று தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கலவரம், ஒருகட்டத்தில் டிசம்பர் 15ந் தேதி 1991 ஆம் ஆண்டு அமைதிக்கு திரும்பியது. அதே ஆண்டு டிசம்பர் 24 மீண்டும் கலவர மேகங்கள் சூழ்ந்தன.

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இக்கலவரத்தின் பாதிப்பு நீடித்தது. இச்சமயத்தில் கர்நாடகாவிலிருந்து ஊட்டிக்கு வந்த படக்குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதால் மீண்டும் அங்கே தமிழர்கள் தாக்கப்பட்டனர். பல்வேறு முகாம்களும் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டு 2 லட்சம் தமிழர்கள் கர்நாடகாவிலிருந்து தமிழகம் திரும்பும் நிலை ஏற்பட்டது. இந்த இரண்டு வார கலவரங்களில் 200 கோடிக்கு மேல் சொத்துகள் நாசமானது!

வழக்கம்போல், பெங்களூருவில் நடந்த கலவரங்களை விசாரிக்க நீதிபதி தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் அமைக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அதன் விசார ணை விவ ரங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வரவில்லை. இந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இழப் பீட்டைப் பெறவேயில்லை என இன்றும் மனத்தாங்கல் இருக்கவே செய்கின்றன.

அப்துல்லாஹ்

# சுற்றி வளைக்காத சுந்தூர் வழக்கு..!

## 1991

1991-ல் த்தில் 8 தலித்துகள் கொல்லப்பட்டார்கள். குண்டூர் மாவட்டத்தில் உள்ள சுந்தூரில் பட்டப்பகலில் அந்தக் கொலைகள் நடந்தன.



காவல் துறையினர் மௌனப் பார்வையாளர்களாக இருந்த நிலையில், 300 உயர்சாதியினர் ஆயுதங்களுடன் தலித்துகளைத் தாக்கி எட்டுப் பேரை கொடூரமாக கொலை செய்தனர். சுந்தூர் மற்றும் அருகில் உள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த ரெட்டிகள் மற்றும் காபூ சாதியைச் சேர்ந்தவர்கள்தான் இந்தப் படுகொலையில் ஈடுபட்டனர். அவர்கள் உள்ளூர் காவல் நிலையம் முன்பு கூடி சமஉரிமையும் சமவாய்ப்புகளும் கேட்ட தலித்துகளுக்குப் பாடம் கற்பிக்க முடிவு செய்தனர். ஏராளமான காவல்துறையினர் அப்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தும், இந்தப் படுகொலைகள் நடந்தன. கொல்லப்பட்ட அனைவரையும் சாக்குப்பைகளில் வெட்டிப்போட்டு சாக்கடைகளில் எறிந்தனர்.அப்போதைய பிரதமராக இருந்த வி.பி. சிங், சுந்தூருக்கு பாதிக்கப்பட்டவர்களை ஆறுதல்படுத்தச் சென்றார். ஆந்திரப்பிரதேச தலித் மகாசபா பெயரில் ஆந்திரா முழுவதும் தலித்துகள் போராட்டங்களில் இறங்கினர். இதையடுத்து சுந்தூரில் 219 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

10 ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகு சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே வழக்கு விசாரணை நடைபெற்றது. 2007 ஆம் ஆண்டு ஜுலை 31ம் நாள் கடுமையான பாதுகாப்புக்கு இடையே சிறப்பு நீதிமன்றம் 21 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், 31 பேருக்கு ஓராண்டு காவல் தண்டனையும் தீர்ப்பளித்தது. ஆனால் இன்னமும் பெரும்பாலானவர்கள் இது ஓரளவு வெற்றி என்றே நினைக்கின்றனர். குற்றம்சாட்டப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் மீண்டும் மாநில உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

மற்ற கலவரங்களை நோக்கின்,சுந்தூரைப் பொறுத்தவரை சுற்றி வளைத்துக் கொண்டிராமல்,தலித்துகளின் கொடுமைக்காக நாடே திரண்டு நின்று போராடியதால் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதுதான் முக்கிய திருப்பம்! 13 ஆண்டுகள் தாமதமானாலும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் நிவாரணம் கிடைத்தது முக்கியமானது!

# முடங்கிப் போன மும்பை..!

## 1993

' ந்திய மானத்தை வெட்கித் தலை குனியச் செய்த பாபரி மஸ்ஜித் இடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, இந்திய வர்த்தக தலைநகரான மும்பையில் கலவரம் தொடங்கியபோது, ஹரி மசூதி சம்பவம் நடைபெற்றது.




இந்தச் சம்பவம் மும்பையின் பிரிவினைவாதத் தீயிக்கு எண்ணெய் விட்டதுபோல் ஆகிவிட்டது. மத்திய மும்பையில் அமைந்துள்ள வதாலா பகுதியில் இருக்கும் ஹரி மசூதியில்,பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில், ஆறு பேர் பலியானார்கள். ஒருவர் மசூதியிலிருந்து வெளியே வரும்போது நிறுத்திவைத்து சுடப்பட்டார்.அடுத்து அங்கிருந்த சடலங்கள் உடனடியாக போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டு மறைந்து போனதாக காயமடைந்தவர் தெரிவிக்கிறார்.

அத்துடன் அப்பகுதியில் இருந்த 50 முஸ்லிம்கள் கலவரத்தைத் தூண்டியதாகவும், கொலைமுயற்சியில் ஈடுபட்டதாகவும் கைது செய்யப்பட்டனர். அப்பகுதியில் எந்தப் பிரச்னையும் இல்லாமலேதான் இந்த துப்பாக்கிச்சூடும் கைதுகளும் நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஆம்னெஸ்டி அமைப்பும் நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணாவும் விசாரித்ததின் அடிப்படையிலும்,உதவி

அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு

# IPC உம்ரா பயணம்: நாட்டுத் தலைவரின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்..!













الأخ الفاضل المحامي مشيف عبدالله المشيف العجمي
لجنة التعريف بالإسلام

تحية طيبة وبعد ،

تلقينا بكل التقدير هديتكم الكريمة بمناسبة عودة قافلة عمرة المغفور لها بإذن الله تعالى الشيخة سلوى صباح الأحمد الصباح المخصصة للمهتدين والمهتديات ، وإذ نعرب لكم عن خالص الشكر على هذا الإهداء الذي جسد مشاعر الود والمحبة ، فإننا نثمن ما يرمز إليه من معاني التواصل ، سائلين المولى تعالى أن يتقبل هذه العمرة ، وأن يجعل ذلك في موازين أعمالكم ويديم على الجميع موفور الصحة ودوام العافية.

وتقبلوا خالص التقدير ...

صباح الأحمد الجابر الصباح
أمير دولة الكويت

الكويت في : ١١ جمادى الأولى ١٤٣٣ هـ
الموافق : ٢ ابريل ٢٠١٢ م



இஸ்லாமிய நிலையம் - IPC,அனைத்து கிளைகள் இணைந்து குவைத் தேசிய மற்றும் விடுதலை தின விழாவை விமரிசையாக கொண்டாடின.கப்த் கிளையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்,தெலுகு, இந்தி,மலையாளம்,நேபாளம் மொழிகளைச் சார்ந்த புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோதரர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்குப் பரிசுக



ஆய்வாரள ஒருவர்தான், இச்சம்பவத்துக்குக் காரணமான முக்கிய குற்றவாளி என்றும் கூறியுள்ளனர். ஆறு முஸ்லிம்களின் மரணத்துக்குக் காரணமான இந்த துப்பாக்கிச்சூடு அநியாயமானது என்று ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் கண்டித்துள்ளது.

மும்பையில் நடந்த கலவரங்களில் 900 மரணங்கள் பதிவாகியுள்ளன. 575 பேர் முஸ்லிம்கள். 275 பேர் இந்துக்கள். 45 மரணங்கள் அடையாளம் காணமுடியாதவை. இதுகுறித்து மதவாதத்திற்கு எதிராக தொடர்ந்து எழுதிவரும் ராம் புன்யானி, “மதக்கலவரங்கள் மக்கள் மனதில் மதவாதம் ஏற்றப்படுவதால் உருவாகின்றன. இது பின்னர் அரசியல் வாதிகளால் பயன்படுத்தப்படுகிறது. அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைமை பதில் சொல்லும் கடமையுடன் இருப்பதும் அவசியம். நம்மிடம் மதவன்முறையை அடக்கு வதற்கு ஏற்கெனவே நல்ல சட்டங்கள் உள்ளன” என்கிறார்.

ஆனால் யார் அந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்தப் போகிறார்கள்? “சமூகத்தில் உள்ள தீயசக்திகளை நீங்கள் பாதுகாப்பீர்கள் எனில், அது உங்களது அமைதியையும் ஒருநாள் அழிக்கும்” என்கிறார் ஒரு சமூகப் பணியாளர். அதுதான் மும்பையில் 1992-93லும் நடந்தது.

அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு

# மருங்கச் செய்த மராடு படுகொலைகள்..!

## 2002



Nf ர ளத்தில் மராடில் 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ந் தேதி முதல் மதக்கலவரம் நடந்தது. இந்து மீனவர்கள் மற்றும் முஸ்லிம் மீனவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் மூன்று இந்துக்களும், இரண்டு முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். இரண்டாவது கலவரம் 2003-ல் மே மாதம் 2ந் தேதி நடந்தது. இந்த கலவரத்தில் அதிகாரபூர்வமான தகவல்களின்படி, எட்டு இந்து மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2002 ஆம் ஆண்டு ஜனவரியில் நடந்த படுகொலைகளுக்கு பழிதீர்க்கவே இக்கொலைகள் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த இரண்டு சம்பவங்களும் நடைபெற்ற இடம் மராடு.

கேரளத்தின் கோழிக்கோடுக்கு அருகில் உள்ள மிக அழகிய கடற்கரை ஊராகத் திகழும் இடம் இது. ஆனால் குறுகிய காலத்திலேயே நடந்த இரண்டு சம்பவங்களும் இன்னமும் அப்பகுதியில் வசிப்பவர்களை அச்சுறுத்தலிலேயே வைத்துள்ளன. இச்சம்பவங்கள் தொடர்பாக காவல்துறையினர் சரியாக ஊகித்துச் செயல்படவில்லை என்று பொதுவான புகார் உள்ளது.

அத்துடன் நிர்வாகக் குளறுபடி, நீதி வழங்குவதில் தாமதம் மற்றும் அரசியல் தலையீடு, வியாபாரிகள் தலையீடுகளும் காரணமாக உள்ளன.

இப்படுகொலைகள் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு விசாரணை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் அடுத்து வந்த இரண்டு மாநில அரசுகளும் இதை ஏற்கவில்லை.

மராடில் நடந்த இரண்டாம் கலவரம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 27ந் தேதி 63 பேர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டது. 2002-ல் நடந்த கலவரம் சம்பவம் தொடர்பாக 2009 ஜனவரி 5ந் தேதி அன்றே ஏழு ஆண்டுகள் தாமதமாக தீர்ப்பு வந்தது.

## கலவரமான கந்தமால்..!

## 2008



ந்

,

தியாவில் கிறிஸ் துவர்கள் மேல் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இது என் வருணிக்கின்றனர். கந்தமால் பகுதியில் உள்ளூர் பழங்குடிகளின் நலனுக்காக பணி செய்துகொண்டிருந்த துறவி ஒருவர் 2008 ஆம் ஆண்டு ஆகஸ்டு 23ந் தேதி கொல்லப்பட்டார். அப்போதுதான் இந்தக் கலவரங்கள் உருவாயின

தாக்குதல்களுக்கு பயந்து 24 ஆயிரம் கிறிஸ்துவர்கள் வீட்டைத் துறந்து வெளியேறினர். மதப்பிரச்னையும் இனப்பிரச்னையும் சேர்ந்து தொடுக்கப்பட்ட இக்கலவரத்தில் 54 பேர் பலியானார்கள். ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்கள் வீடு இழந்தனர். 100 தேவாலயங்கள் அடித்து நொறுக்கப் பட்டன. இந்தச் சம்பவத்தால் மாநில அரசுக்கு மிகப்பெரிய சங்கடம் ஏற்பட்டது. சர்வதேச சமூகம் கிறிஸ்துவர்களுக்குப் பாதுகாப்பளிக்க தவறிய ஒடிசா அரசுக்குக் கண்டனம் தெரிவித்தது.

ஒடிசா அரசு, நிலைமையைச் சமாளிக்கவும், சிறுபான்மையினரை அமைதிப்படுத்தவும் இரண்டு விரைவு நீதிமன்றங்களை உருவாக்கியது. விரைவு நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட 820 வழக்குகளில் 70 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டு, 420 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர். 152 வழக்குகளில் 2111 நபர்களை நீதி மன்றங்கள் விடுதலை செய்துள்ளன.

கலவரப் பகுதிகளை மேம்போக்காகப் பார்க்கையில் எந்தப் பதற்றமும் தெரியவில்லை. ஆனால் உள்ளூர நெருப்பு இன்னும் அணைய வில்லை.

## கொடுங் குஜராத்!

## 2002



m

ந்த நினை வுகள் நிழல்க ளாக மட்டு மல்ல..,

ஒரு கொடிய நிஜமாக மாறி விட்டிருக்கின்றது சிறுபான்மை முஸ்லிம்களிடத்தில்..! கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரங்களில் அரசு எந்திரமே சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஆடிய தாண்டவம், அம்மாநில முதல்வருக்கு வல்லரசு ஒன்று தனது நாட்டுக்கு வர விசா மறுக்கும் அளவுக்கு நீண்டது.

பிரபல டைம்ஸ் இதழ் நடத்திய உலகின் பிரபல்ய நபர்களுக்கான பட்டியலில் அந்த நபர் அதிகம் வெறுக்கப்படும் நபராக மக்களால் ஆவேசமாக ஒதுக்கப்பட்டார்!

நரேந்திர மோடி அரசு நடத்திய இந்த சிறுபான்மை எதிர்ப்பு வெறி பலி கொண்ட உயிர்கள் ஏராளம். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான பெண்களின் கற்புகள் சூறையாடப் பட்டது.

கர்ப்பிணிகள், குழந்தைகள், ஊனமுற்றவர்கள் உட்பட எந்த ஒரு முஸ்லிமும் தப்பவில்லை. 2 மாதங்கள் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இந்திய இறையாண்மையே சீரழிக்கப்பட்டது.இதற்கு மேலாக, குஜராத் இனப்படுகொலை தொடர்பாக குஜராத் முதல்வர் நரேந்திர மோடியிடம் விசாரணை நடத்துவதற்கு ஆதாரம் இல்லை என்று கூறினார் குஜராத் இனப்படுகொலை விசாரணை கமிஷன் தலைவரான நீதிபதி நானாவதிஅவரது மகன்கள் இருவருக்கும் அரசு வழக்குரைஞர் பதவியை வழங்கி கைம்மாறு செய்துள்ளார் மோடி.

## தீர்வு என்ன..?

Nk லே நாம் கண்ட.., தொடர்கதையாய்

தொடர்ந்த துயரங்கள் வாழ்வைப் புரட்டிப் போட்டன. நீதிகள் மறுக்கப்பட்டு, நகரங்கள் பல தவிப்பில் விடப்பட்டன.நம்பிக்கைகள் பொய்த்து, கிளப்பபட்ட கலவரப் பூதங்கள் உயிர் குடிக்க ஆரம்பித்தன.துப்பாக்கி நீதிகள் துர்ப்பாக்கியங்களாய் துலங்கின.

ஆம்..! கலவரங்களால் பெரும்பாலும்



சிறுபான்மையினரும் ஒடுக்கப்பட்டோரும்தான் பெருமளவில் பாதிப்புக்குள்ளாவது சர்வ சாதாரணமாகியது.இவற்றுக்கிடையில் சாமான்யர்களின் அச்சக்குரல்கள் எவ்வாறு அகற்றப்பட வேண்டும்?கலவரங்களை களையெடுக்க முடியாதா என்ன..?அதற்கான வழிமுறைகள் இல்லையா என்ன..? நிச்சயம் உண்டு..!

அதற்கு முதலில் இந்திய அரசியல் சட்டத்தை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.இருவேறு வகுப்பினரிடையே மோதலைத் தூண்டும்,உருவாக்கும் எந்த நபரையும் நிச்சயம் வளரவிடக்கூடாது..! இவற்றையெல்லாம் மீறி எந்த அசம்பாவிதம் நிகழ்ந்தாலும் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதில் தாமதம் கூடாது.குற்றவாளிகளுக்கு சட்டப்படி கிடைக்கும் தண்டனைதான் கலவரங்களுக்கு கடிவாளம் இட முடியும்.

தனிமனித பாதிப்பு என்பது வேறு,ஒரு சமூகத்தின் பாதிப்பு என்பது வேறு.இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் நீதியின் பாரபட்சத்துக்கு வழி ஏற்படுத்திவிடக்கூடாது. குற்றவாளிகளுடன் சமாதனமாகப் போவது என்பது வேறு..!அவர்களுடன் உடன்படிக்கை என்பது வேறு என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எந்த மதமும் வன்முறையை தூண்டச் சொல்வதில்லை!

எந்த மதமும் அமைதிக்கு சமாதி கட்டச் சொல்வதில்லை.இப்படிப்பட்ட உணர்வுகள் எதிர்மறையாக ஏற்பட்டுவிடுவதால்தான் அனைத்து கலவரங்களும் எமது இறையாண்மைக்கே இன்னல் தரும் சவால்விட ஆரம்பித்துவிடுகின்றன. இந்திய ஜனநாயகத்தின் வலிமையே வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, தோள் தட்டும் வலிமையுடன் நிற்கும் அதன் மதச்சார்பின்மைதான்.

120 கோடி மக்களின் உணர்வுகளின் மதிப்பில்தான் இந்த வலிமையின் ஆணிவேர் பொதிந்துள்ளது.அதனைப் பிடுங்க எவர்.., எந்த 'மோடி' மஸ்தான் வேலைகளைச் செய்தாலும்..,அவர்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.இதுதான் உண்மையான தீர்வாக இருக்க முடியும்.


**அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு**

ஆம்.., மன்னிப்பு கேட்க வார்த்தைகள் தெரியாமல் தவித்த ஆர்கோவிடம் அன்சாரி சுருக்கமாக கூறினார்: "எதுவும் யாருடைய குற்றமும் இல்லை. நீங்கள் உங்களுடைய பணியை செய்தீர்கள். நான் எனது பணியை செய்தேன். இங்கு என்ன நடந்தது என்பதை எனது புகைப்படம் உலகிற்கு படம் பிடித்து காட்டியது. மீதமுள்ளவை எல்லாம் எனது விதியாகும்." பத்து வருடங்கள் அன்சாரியிடம் ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தின. எட்டு வயது மகனும், நான்கு வயது மகளும் அச்சம்பவத்திற்கு பிறகு பிறந்தவர்கள். மூத்த மகளுக்கு 14 வயதாகிறது.அன்றாட வாழ்க்கையை கழிக்க ஒரு சிறிய தையல் கடை உள்ளது. "என்னை நீங்கள் என்றைக்கும் ஒரு நல்ல நண்பனாகவே காணவேண்டும்" என்று ஆர்கோ அன்சாரியிடம் வேண்டுகோள் விடுத்தார். இன்று அன்சாரியின் முகத்தில் காணப்படும் புன்சிரிப்பு ஒருபோதும் நஷ்டமாக கூடாது என்று நாமும் பிரார்த்திப்போம்.

திருமறை கூறுகின்றது:- இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது. அல்லாஹ்வுக்கு அஞ்சிச் செயலாற்றுங்கள். நீங்கள் செய்வனவற்றை முழுமையாக அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான்..! (5:8)

## உலகிலேயே அதிகம் வெறுக்கப்படும் நபர்!

**இந்தியா உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் . உள்நாட்டில் அது தொடர்ந்து பேணிவரும் மதச்சார்பற்ற மாண்பும், சமதர்ம சமுதாயம் அமைப்பதே அது முக்கியக் குறிக்கோள் என்று அறிவித்ததும், வெளியுறவுக் கொள்கையளவில் இந்தியா கடைப்பிடித்து வரும் அணிசேரா நடுநிலைக் கொள்கையுமே.**



**குஜராத் இனப்படுகொலை நிகழ்ந்து உலகின் இதயங்களை ரணமாக்கியது. 21ஆம் நூற்றாண்டின் முதல் இனப்படுகொலையான குஜராத் இனப் படுகொலையின் முக்கிய சூத்திரதாரியான மோடியே இன்று உலகிலேயே அதிகம் வெறுக்கப்படும் நபர் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளார். அவரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை விதிக்க வேண்டும் என்ற குரல் சர்வதேச அளவில் எதிரொலித்தது!**

சத்தமில்லாமல் சமையலறை நுழைந்து
முத்தம் கொடுத்துவிட்டு ஓடுகிறாய்!

என் பசி மறந்து உனக்காக
காத்திருக்கும்பொழுது
காத்திருக்கவேண்டாமென கண்டித்து
விட்டு..,
ஒரு கையால் இரு இதழுக்கு ஊட்டுகிறாய்!

சான்றிதழுக்காக லஞ்சம் கொடுத்துவிட்டு
கெஞ்சுபவனைப்போல...
மல்லிகைப்பூ
தந்துவிட்டு
மன்றாடுகிறாய்!

பள்ளிக்கு செல்லமறுத்து
தூங்குவதாய் நடிக்கும்
சின்னப்பையனைபோல...
மடியில் படுத்துக்கொண்டு
எழ மறுக்கிறாய்!

அம்மா வருவதாக பாசாங்கு
செய்யும்பொழுது...
பதறி எழுந்து நிலை உணர்ந்து சிரிக்கிறாய்
!

கை இழுத்து வைத்து குளிக்க வைக்க
முயலும்போது குளிரடிப்பதாய் கூறி -
ஒரு குழந்தையை போல அழுகிறாய் !

மறைந்திருந்து கட்டிப்பிடிப்பாய்...!
கையிலிருப்பதை தட்டிப்பறிப்பாய்

கெஞ்சுவதும்... மிஞ்சுவதும்...,
அழுவதும்... அணைப்பதும்...,
கண்டிப்பதும்... கண்ணடிப்பதும்...,
இடைகிள்ளி... நகை சொல்லி...,
அந்நேரம் சொல்வாயடா 'அடி கள்ளி '..!

இவையெல்லாம் இரண்டே மாதம்
தந்துவிட்டு...
எனை தீ தள்ளி வாழ்வள்ளி
சென்றுவிட்டாய்...!
என் வளைகுடா கணவா!

கணவா...! எல்லாமே கனவா....???

கணவனோடு இரண்டு மாதம்..!
கனவுகளோடு இருபத்தி இரண்டு
மாதமா...?

12 வருடமொருமுறை குறிஞ்சிப்பூ ...!
5 வருடமொருமுறை ஒலிம்பிக்....!
4 வருடமொருமுறை உலககோப்பை
கிரிக்கெட்... ...!
1 வருடமொருமுறை கணவன் ...!
நீளும் பட்டியலோடு நீயும்
இணைந்துகொண்டாய்!



## யூஸூ:ஃபும் சகோதரர்களும்.! - 2

எல்மா ரூத் ஹார்டர்

தமிழில்
மழலைப்ரியன்

# யூஸூ:ஃபின் கனவு!

ஒரு நாள் இரவு, யூஸூ :ஃப் விந்தையான கனவு கண்டார். பதினோரு நட்சத்திரங்களும் நிலவும், சூரியனும் அவருக்கு எதிரில் பணிந்து வணங்குவதாக கனவு கண்டார்.

யூஸூ :ஃப் இந்தக் கனவைப் பற்றியே நினைத்து வியந்து கொண்டிருந்தார். தாம் கண்ட கனவை தந்தையிடமும் கூறினார். இறைவன் சிறந்த வழியில் யூஸூ பை செலுத்தப் போவதை, ய:ஃகூப் நபி புரிந்துகொண்டார். அவர் யூஸூ :ஃபிடம், இந்தக் கனவைப் பற்றி உன் சகோதரர்களிடம் கூறாதே..! இது அவர்களுக்குப் புரியாது" என்றார்.

அவர்கள் யூஸூ :ஃபைப் புண்படுத்தக்கூடுமென பயந்தார். யூஸூ :ஃபிற்காக அல்லாஹ் ஒரு சிறந்த திட்டம் வைத்திருப்பதை ய:ஃகூப் நபி புரிந்து கொண்டார்.

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

# திருக் குர்ஆன்

அத்தியாயம் 112

## அல்-லஹப்

இஸ்லாத்தின் எதிரி அபூ-லஹப் என்பவனை சபித்து இறங்கிய அத்தியாயம் இது..!
இதன் இன்னொரு பெயர்

## அல்-மஸத்

மக்காவில் அருளப்பட்டது
வசனங்கள்:5

| |
|---|
| بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ① |
| تَبَّتْ يَدَآ اَبِيْ لَهَبٍ وَّتَبَّ ① |
| 112:1 த(b)ப்பதிய்யத அ(b)பி லஹ(b) பி(ன்)வ் வத(b)ப் |
| 111:1 அபூலஹபின் கைகள் முறிந்துவிட்டன. மேலும், அவன் நாசமாகி விட்டான். |
| مَآ اَغْنٰى عَنْهُ مَالُهٗ وَمَا كَسَبَ ② |
| 112:2 மாஅ(gh) க்னா அன்ஹு மாலுஹு வமா கஸ(b)ப் |
| 111:2 அவனுடைய செல்வமும் அவன் சம்பாதித்தவையும் அவனுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை. |

## இம்மாத வசந்த மழலையர்..!

அஹ்மத் ஜுபைர்-சுமய்யா-ஸ:.பிய்யா
பெற்றோர்
திரு மற்றும் திருமதி
முஹம்மத் இப்ராஹீம்
கல்பாக்கம் (சென்னை) - தமிழ்நாடு
ஸால்மியர - குவைத்

# குர்ஆன் பதிவிறக்கம்..! வாழ்வில் ஏகஇறை மயக்கம்..!

சமீபத்தில், ஹங்கேரியைச் சேர்ந்த ஆயிஷா என்ற சகோதரி சுநயனனைபெ ஐஉடயஅ இணையதளத்திற்கு அனுப்பிய மின்னஞ்சல் இஸ்லாத்தை இளவயதில் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் சந்திக்கக்கூடிய சவால்களை அழகாக வெளிப்படுத்தியது..!அவருடைய வாய்மொழி வாயிலாகவே அந்த கடித சுருக்கம் இங்கே:-



*"என் பெயர் ஆயிஷா. ஹங்கேரியின் வடக்கு பகுதியைச் சேர்ந்தவள்.ஒருமுறை, என் நண்பர்களுடன் இரவு உணவு உட்கொண்டிருந்தபோது, பாங்கு ஆரம்பித்தது. ஒரு நண்பர் அதனை நிறுத்துமாறு கூறினார், நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். அது என்னை மிகவும் கவர்ந்தது, நிச்சயமாக அதில் ஏதோ ஒன்று என் இதயத்தை தொடுவதாக உணர்ந்தேன். பிறகு, கோடைக்காலத்தில், நான் என் இணையத்தளத்திலிருந்து திருக் குர்ஆன் சம்பந்தபட்ட ஒரு பதிவை பதிவிறக்கம் (னுழறடெழயன) செய்தேன். ஆனால், ஏன் என்று தெரியவில்லை.அதனை நான் அரபியில் கேட்டுக்கொண்டே ஆங்கிலத்தில் படித்தேன். பிறகு, நான் இஸ்லாமை பற்றி நிறைய சிந்திக்க துவங்கிவிட்டேன், அதுமட்டுமல்லாமல் இஸ்லாம் தொடர்பான நிறைய நூல்களை படித்தேன்.*

*இரண்டு மாத தீவிர யோசனைக்கு பிறகு இறுதியாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டேன். நான் என் கலாச்சாரத்துக்கு எதிராகவும் என் குடும்பத்திற்கு எதிராகவும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன், குறிப்பாக என் தாயாருக்கு இதில் சுத்தமாக உடன்பாடு இல்லை.மேலும்,என்னை சுற்றி இருந்த முஸ்லிம்கள் யாரும் இஸ்லாத்தை சரிவர பின்பற்றவில்லை, அதனால் நான் யாரிடமும் ஐயங்களும் கேட்கவில்லை.*

*எப்படி தானாக தொழுவது என்று இணையதளங்களில் இருந்து கற்றுக்கொண்டேன்.ஒருமுறை என் நண்பர் ஒருவர் சொன்னது என்னை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. அவர் கூறினார், உன்னால் நிச்சயமாக இஸ்லாத்தை புரிந்து கொள்ள முடியாது, ஏனென்றால் நீ முஸ்லிமாக பிறக்கவில்லை என்று".(இப்படி சொன்ன அந்த சகோதரருக்கு, இஸ்லாமை பற்றிய தெளிவான அறிவை இறைவன் அளிப்பானாக,ஆமீன்!)*

*திருக் குர்ஆன் அத்தியாயங்களையும் தொழும் முறைகளையும் ஒரு தாளில் எழுதிக்கொள்வேன், பின்னர் அந்த தாளை என் வலது கையில் வைத்துக்கொண்டு சத்தமாக படிப்பேன், பிறகு ருகூஉ செய்வேன், அப்படியே படிப்பேன்...இப்படியே தொடரும்... நிச்சயமாக நான் செய்வது வேடிக்கையாய் இருக்கிறதென்று எனக்கு தெரியும். பிறகு வெற்றிகரமாக சூராக்களை அரபியில் மனப்பாடம் செய்துக்கொண்டேன், அதன் பிறகு பிரச்னை இல்லை.*

*ஜோர்டானிலிருந்து என் முதல் அரபி குரானை தபால் மூலம் பெற்றேன், ஏனென்றால் இங்கு அதை வாங்கமுடியாது. இப்போது சுமார் ஒரு வருடமாக நான் ஹிஜாப் அணிகிறேன்.*

*என் தாயுடன் மிக கஷ்ட காலங்களை கடந்து வந்தேன். என் தந்தையுடன் நான் என் வாழ்நாளில் பேசியதே இல்லை, அவரும் என்னைப் பார்க்க விரும்பியதில்லை. ஆனால் இப்போதோ, இஸ்லாமினால், நான் அவரிடம் நெருங்க ஆரம்பித்திருக்கிறேன், அதனால் இப்போதெல்லாம் அவர் எங்களை அடிக்கடி வந்து பார்க்கிறார்.ஆம், என் வாழ்க்கை ஒரு மிகப்பெரிய சோதனை, ஆனால் அதற்காக நான் இறைவனுக்கு நன்றி சொல்லுகிறேன், அதுமட்டுமல்லாமல் எனக்கு பொறுமையும் நம்பிக்கையும் இருக்கிறது. கியாமத் நாளில் நான் அவர்களுக்கு நன்றி உடையவளாய் இருப்பேன்.*

*நான் மென்மேலும் என்னை தூய்மைப்படுத்திக்கொள்ளவும், என் மார்க்கத்தை பற்றி அறிந்து கொள்ளவும் முயற்சி செய்கிறேன். அதுமட்டுமல்லாமல், இஸ்லாத்தை ஏற்க விரும்புகிறவர்களுக்கும்,புதிதாய் ஏற்றவர்களுக்கும் வழிகாட்ட முயற்சிக்கிறேன். நிச்சயமாக இறைவன் தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகிறான்... இறைவன் நம்மை என்றென்றும் இஸ்லாத்தில் நிலைத்திருக்க செய்வானாக...ஆமீன்!அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன்...!*

*நன்றி :ஆசிக் அஹ்மத்*

**அருகில் ரசித்து, ருசித்து இன்னும் சில இட்லிகள் சாப்பிடலாம் என எதிர்பார்த்திருந்த விருந்தாளி நண்பனுக்கோ வெடுக்கென்று ஆனது!**


# வலை கடல்

twitter.com/rajakumaari:



மீண்டும் ஒரு முறை செய்திகளில் ந்திருக்கின்றார் இந்த பதினபருவ முஸ்லிம் வ..!!ஏற்கனவே ஹிஜாபுடன் பள்ளிக்கு வருவத் தடுத்த பள்ளி ஜாபுடன் பள்ளித்

http://www.facebook.com/zeeiya




மீண்டும் ஒரு முறை செய்திகளில் வந்திருக்கின்றார் இந்த பதின்பருவ முஸ்லிம் பாவை..!ஆம்!ஏற்கனவே ஹிஜாபுடன் பள்ளிக்கு வருவதைத் தடுத்த பள்ளி நிர்வாகத்துக்கு

சமூக வலைதள நண்பர் ஒருவர் வாழ்வின் அமைதி,சுபிட்சம் மற்றும் பொருள் குறித்து அறிந்துகொள்ள திருக் குர்ஆனை வாசிக்கக் கேட்டுக் கொண்டார்.நானும் வாசிக்கின்றேன்!

-இந்தி திரை நட்சத்திரம் அமிதாப்பச்சன்

twitter.com/amitabhbachan





twitter.com/rajakumaari:
தேவைகளைக் கேட்டதும் செய்பவர் கணவர்.கேட்டுக் கேட்டுச் செய்பவர் அப்பா..!

twitter.com/navi_n:
எவ்வளவு ஜாலியா இணையத்தில் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்..!


http://www.facebook.com/Rizwana2k2




http://www. facebook.com/fmuzman



SARKOSI may Punish them



SARKOSI may reward her.!



http://www.facebook.com/ALLAH.ISLAM.QURAN

http://www.facebook.com/Zinoofa Ansar




http://www.facebook.com/Shafeeka Hisham



தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிக்கெட் விளையாட்டிலும் மார்க்க நெறிமுறைகளிலிருந்து பிறழாமல் வாழ்பவர். அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன்





தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிகமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிக்கெட் விளையாட்டிலும் மார்க்க நெறிமுறைகளிலிருந்து பிறழாமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிகளும் வீற்ற



தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிகமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிக்கெட் விளையாட்டிலும் மார்க்க நெறிமுறைகளிலிருந்து பிறழாமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிகளும் வீற்றிருக்க சற்றும் சங்கோஜம்



தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிகமல் வாழ்பவர். அவருடைய துணைவியும் இதிலிருந்து



தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிகமல் வாழ்பவர். அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிக்கெட் விளையாட்டிலும் மார்க்க நெறிமுறைகளிலிருந்து பிறழாமல

தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிகமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை




போட்டியில் பங்கு பெறுங்கள்! பெறுமதியான பரிசு வெல்லுங்கள்!!

# மகளிர் சிறப்பிதழ் சிறப்பு அறிவுப்போட்டி!

1

இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர்,



2

இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர்,




3

இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர்,




4

இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர்,



5

இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர்,



## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 05. 2012 10. முடிவுகள் வசந்தம் ஆகஸ்ட் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

## விதிமுறைகள்

பெயர் Name

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்/நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait


அடுத்த இதழ் கல்விச் சிறப்பிதழ்..!
அடுத்த கட்ட கல்வித் தகுதிக்கு என்ன படிக்கலாம்..?
ஆரம்ப கல்வி ஏன் அசத்துவதில்லை..?
இன்னும் புத்தகசுமை தேவைதானா..?
ஈயடிக்கின்றதா என்ஜினீரிங் கல்வி..?

ஏப்ரல் 22
பூகாள பாதுகாப்பு தினம்

# புகலிட புவியைப் பாழ்படுத்தாதீர்..!

ஓசோனில் ஓட்டையிட்டும் ஓயவில்லையே நாம்..!
துயருண்ட விளைநிலத்தை எப்படி நனைக்கும் துளிமழை..?
வருங்கால சந்ததி பூமியின் வளத்தை வாழ்விக்க..,
இறை தந்த வாழ்நிலத்தை.., பாழ்படுத்தாது.., புவி காப்போம்..!

